# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - நவம்பர் 17, 2025

Weekly E-paper ● November 17, 2025




# அய்யா இராம.சுப்பையா அவர்களுக்கு நானும் கொள்ளுப் பேரன்

## காரைக்குடியில் துணை முதல்வர் உதயநிதி பேச்சு!

**காலங்கடந்தும் நம்மை வழிநடத்தும் அய்யா இராம.சுப்பையா!**

'பெல்' கு.இராசன்

**குழப்பும் 'SIR'**

தலையங்கம்

**காரைக்குடி அய்யா இராம.சுப்பையா அவர்கள் 118 ஆம் பிறந்தநாள் விழா!**

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - நவம்பர் 17, 2025 Weekly E-paper ● November 17, 2025


# அய்யா இராம.சுப்பையா அவர்களுக்கு நானும் கொள்ளுப் பேரன்

## காரைக்குடியில் துணை முதல்வர் உதயநிதி பேச்சு!

பெரியாரின் பெருந்தொண்டர் அய்யா இராம. சுப்பையா அவர்களின் 118ஆம் பிறந்தநாள் விழா 14-11-2025 அன்று காரைக்குடியில் நடைபெற்றது. அந்த விழாவில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி :



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தன் சொந்த அண்ணனைப் போல, அய்யா இராம சுப்பையா அவர்களுடன் உரிமையோடும், மரியாதையோடும் பழகினார்கள். நம் முதலமைச்சர் அவர்களுக்கும், அய்யா இராம.சுப்பையா அவர்கள் மீதும், அவருடைய தொண்டின் மீதும் மிகப்பெரிய மதிப்பும் மரியாதையும் உண்டு. கலைஞர் குடும்பத்துக்கும், அய்யா இராம. சுப்பையா அவர்களின் குடும்பத்துக்கும் மூன்று தலைமுறை பந்தம், அது.

அய்யா இராம.சுப்பையா அவர்களின் வீட்டுக்குப் பெயரே சமதர்மவிலாஸ். இந்தப் பெயரை சூட்டியவர் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர். 2015 ஆம் ஆண்டில் அந்த வீட்டை பழமை மாறாமல் புனரமைத்துள்ளார்கள். அப்போது ஒரு நிகழ்ச்சிக்காக நம் பொதுச் செயலாளர் துரைமுருகன் மாமா இந்தப் பக்கம் வந்து இருக்கிறார். அய்யா சுப்பையா அவர்களின் புனரமைக்கப்பட்ட வீட்டையும் சென்று பார்த்து இருக்கிறார். பிறகு சென்னை திரும்பியதும், கலைஞர் அவர்களைப் பார்த்து, சுப்பையா அண்ணன் வீட்டை அப்படியே பழமை மாறாமல் புதுப்பித்து இருக்கிறார்கள்.

அங்கு இருந்த தூண், முற்றம், ஹால் எல்லாமே அப்படியே இருக்கு என்று, துரைமுருகன் மாமா கலைஞர் அவர்களிடம் சொல்லி இருக்கிறார்.

உடனே கலைஞர் அவர்கள், அண்ணன் சுப.வீரபாண்டியன் அவர்களைப் பார்த்து, 'கிணறு ஒன்று இருந்ததே அதை அப்படியே வைத்திருக்கிறீர்களா' என்று கேட்டுள்ளார்.

உடனே அங்கு இருந்த நம் கழகத்தலைவர் அவர்கள், "எப்படிப்பா கிணறு இருந்ததை எல்லாம் இப்போ வரை சரியாக ஞாபகம் வைத்திரு க்கிறீர்கள்?"என்கிறார்.

அதற்குக் கலைஞர் அவர்கள், "அந்தக் கிணற்றில் பலமுறை நானே தண்ணீர் இறைத்துக் குளித்து இருக்கிறேன். எப்படி மறக்க முடியும்"- என்று சொல்லி இருக்கிறார்கள்.

1930 களில், பெரியார் கொள்கைகளை இந்தக் காரைக்குடி பகுதியில் பரப்புவது என்பது சாதாரண விஷயம் கிடையாது. நிறைய எதிர்ப்புகள், நேரடியாவும், மறைமுகமாவும் இருந்தன. ஆனால், அய்யா சுப்பையா அவர்கள் மனம் தளரவில்லை. குடும்பத்துடன் சேர்ந்து சுயமரியாதை இயக்கப் பணிகளை அவர் செய்துகொண்டிருந்தார். குறிப்பாக, 1935 களிலேயே, கிட்டத்தட்ட 90 ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் பகுதியில் கைம்பெண் மறுமண நிகழ்வுகளை நடத்தி சாதனை புரிந்தவர்தான் அய்யாவின் துணைவியார். அய்யா இராம.சுப்பையா அவர்களின் வாழ்க்கை நாமெல்லாம் படிக்க வேண்டிய ஒரு பாடம்.

கலைஞர் அவர்கள், அய்யா இராம.சுப்பையாவைப் பற்றி பேசும் போது, காரைக்குடிக்கும், கல்லக்குடிக்கும் நெருங்கிய தொடர்பு பற்றி பேசுகி றா ர். கலைஞர் அவர்களின் தலைமையில் நடந்த கல்லக்குடி போராட்டம், முதல் அணிக்கு கலைஞர் தலைமை, இரண்டாவது அணிக்கு இராம.சுப்பையா அவர்கள், மூன்றாவது அணிக்கு கண்ணதாசன் அவர்கள் தலைமை. தமிழ்நாடு அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான ஒரு போராட்டம். அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு கலைஞர் அவர்களுடன் மூன்று மாதங்கள் சிறையில் இருந்தவர்தான் அய்யா இராம.சுப்பையா அவர்கள்.

முதலில் அரியலூர் சிறையிலும், தண்டனை அறிவிக்கப்பட்டு, பிறகு திருச்சி மத்திய சிறையிலும் அடைக்கப்பட்டார்கள். திருச்சி ஜெயிலில் கலைஞர் அவர்களுக்கு 6 மாதம் சிறை, அய்யா இராம. சுப்பையா அவர்களுக்கு 3 மாதம் சிறை தண்டனை. ஜெயிலில் ஒரு 'மாதிரி அரசாங்கத்தையே' கலைஞர் அவர்கள் அமைத்தார்கள். இன்னும் சொல்லப்போனால், அதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்த 'முதல் அமைச்சரவை' என்று பலபேர் பேசும்போது குறிப்பிட்டுப் பேசுவார்கள். அண்ணன் எஸ்.பி.முத்துராமன் அவர்கள் சொன்னதைப்போல அந்த அமைச்சரவையில், அய்யா இராம. சுப்பையா அவர்கள்தான் உணவு மந்திரி. ஜெயிலில் எல்லோருக்கும் சரியான நேரத்தில் உணவு சென்று சேருகிறதா என்பதை உறுதிப்படுத்த

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

# காலங்கடந்தும் நம்மை வழிநடத்தும் அய்யா இராம.சுப்பையா!

‘பெல்’ கு.இராசன்

'பெரியார் பெருந்தொண்டர்' என்ற அடைமொழிக்கு இலக்கணமாக வாழ்ந்து மறைந்தவர் அய்யா காரைக்குடி இராம.சுப்பையா அவர்கள்.

தான் நன்றாக இருக்க வேண்டும், தன் குடும்பம் நன்றாக இருக்க வேண்டும், என்று வாழ்பவர்கள் சராசரியான வர்கள்.

தன் நலனை விட, தன் குடும்ப நலனை விட மக்கள் சமூகம் நன்றாக இருக்க வேண்டும், இச்சமூகத்தில் அனைவரும் சுயமரியாதையோடு, பகுத்தறிவோடு வாழவேண்டும் என்று தன்வாழ்நாள் முழுவதும் பாடுபட்டவர் பெருந்தொண்டர் காரைக்குடி இராம. சுப்பையா அவர்கள்.



தந்தை பெரியார் மூலம் சுயமரியாதைச் சிந்தனையை உள்வாங்கிய இராம.சுப்பையா அவர்கள் தன்னலமற்ற செயல் பாடுகளால், காரைக்குடியில் பல எதிர்ப்புகளுக்கு இடையே பகுத்தறிவுப் பிரச்சாரத்தை மிகத் தீவிரமாக முன்னெடுத்தவர்களில் முதன்மையானவர்.

ஒரு பகுதியில் சமூக மாற்றம் ஏற்பட வேண்டும் என்றால் அந்தப் பகுதி மக்கள் அனைவரும் முன்னெடுக்க மாட்டார்கள், அந்தப் பகுதியின் ஒரு சிலர்தான் முன்னெடுப்பார்கள். ஒவ்வொரு ஊரிலும் அதுதான் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். அந்த வகையில் இராம.சுப்பையா அவர்களும் காரைக்குடியில் மிகப்பெரிய சமூக மாற்றம் ஏற்பட முயன்ற சிலரில் முதன்மையானவர்.

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், அஞ்சா நெஞ்சன் அழகிரி, புரட்சிக் கவிஞர் பாரதிதாதன், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், W.P.A. சௌந்தரபாண்டியனார் என்று திராவிட இயக்க -பொதுவுடமை இயக்கத் தலைவர்களுடன் இணைந்து பணியாற்றியவர் அவர், சுய மரியாதையோடும், பகுத்தறிவோடும் வாழவேண்டும் என்று தன்வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட பெருந்தகையாளர்.

தான் மட்டும் பொது வாழ்க்கையில் ஈடுபட்டதோடு இல்லாமல் தன் இணையர் விசாலாட்சி அம்மையார் அவர்களையும் பகுத்தறிவுப் பிரச்சாரத்தில் பங்கேற்க வைத்தவர்.

அன்றைய காரைக்குடியில் பெண்கள் செருப்பு அணிவதும், குடை பிடித்து நடப்பதும் அநாகரீகமான செயல் என்று கருதிய சமூகத்தில், தன் இணையர் விசாலாட்சியை செருப்பணிந்து குடை பிடித்து அழைத்துச் சென்ற துணிச்சல்காரர், கலக்காரர்.

காரைக்குடியில் மட்டும் இயங்காமல் நாகை சுயமரியாதை மாநாட்டில் திறப்புவிழா அறிமுக உரையாற்றியும், சுயமரியாதைத் திருமணங்களைத் தலைமையேற்று நடத்தி வைத்தும், மறுமணத்தை தலைமையேற்று நடத்தியும், ராகு காலத்தில் தன் வீட்டில் திருமணத்தை நடத்தி வைப்பது என்றும் தன் இணையருடன் இணைந்து பெரியாரின் சுயமரியாதைப் பிரச்சாரத்தை துணிச்சலுடன் மேற்கொண்டார் அன்றைய காலத்தில்.

தனக்குப் பிறகு தன்னைப் போல இந்தச் சமூகத்துக்குத் தொண்டு செய்ய தன்இளைய மகன் சுப.வீரபாண்டியன் அவர்களை உருவாக்கியவர்.

'தந்தை எட்டடி பாய்ந்தால் பிள்ளை எண்பதடி பாயும்' என்ற முது மொழிக்கு ஏற்ப தந்தையைப் போல், உலகமெங்கும் சென்று பெரியாரின் கொள்கையையும் – பகுத்தறிவுப் பிரச்சாரத்தையும் பரப்பச் செய்வதையே தன் வாழ்நாள் பணியாகக் கருதி பணியாற்றி வருகிறார் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்கள்.

பேராசிரியர் சுபவீ அவர்களின் முன்னெடுப்பில் ,திராவிட இயக்கத் தமிழர் பேரவை மண்ணின் மைந்தன் பெரியார் பெருந்தொண்டர் காரைக்குடி இராம.சுப்பையா அவர்களின் 118 ஆவது பிறந்த நாள் விழாவைக் காரைக்குடியில் நடத்தியது.

அதில் மாண்புமிகு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் மாண்புமிகு பெரியகருப்பன், வழக்கறிஞர் அருள்மொழி ஆகியோர் கலந்து கொண்டு புகழ் வணக்கம் செலுத்தி உரையாற்றி இருக்கிறார்கள்.

காரைக்குடி மண்ணிலே பிறந்து காரைக்குடி பகுதியில் பகுத்தறிவுப் பிரச்சாரத்தை முன்னெடுத்த மூத்த தொண்டர் காரைக்குடி இராம. சுப்பையா அவர்கள் வாழ்வும், பணியும் காலம் கடந்தும் நம்மை வழிநடத்துகிறது.

### பெரியார் பெருந்தொண்டர்

காரைக்குடி இராம.சுப்பையா அவர்களுக்கு 118ஆவது பிறந்த நாளில் வாழ்த்துகளைத் தெரிவித்து நாமும் அவரை நினைவுகூர்ந்து மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வோம்.

---

## முன்பக்கத் தொடர்ச்சி...

வேண்டியது அய்யா இராம.சுப்பையா அவர்களின் பொறுப்பு. தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரைக்கும் அய்யா இராம.சுப்பையா அவர்கள் முன்னாள் அமைச்சராக இல்லை. ஆனால், தி.மு.க-வைப் பொறுத்தவரைக்கும் அய்யா இராம.சுப்பையா முன்னாள் அமைச்சர் என்று சொன்னால் அது மிகையாகாது.

இப்படி, கலைஞர் குடும்பத்திற்கும் அய்யா இராம.சுப்பையா அவர்களின் குடும்பத்திற்கும் கொள்கை உறவையும் தாண்டி, ஜெயில் உறவு இருக்கிறது. அதனால்தான் நான் தைரியமாகச் சொல்கிறேன், நான் கலைஞருக்கு மட்டும் பேரனில்லை, அய்யா இராம.சுப்பையா அவர்களுக்கும் நான் பேரன்தான்; கொள்ளுப் பேரன் இல்லை, கொள்கை வழி பேரன்.

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## குழப்பும் 'SIR'

தமிழ்நாட்டில் தி.மு.க கூட்டணி வலிமையாக இருக்கிறது. ஆனால் அ.தி.மு.க. கூட்டணி கலகலத்துப் போய்விட்டது.

அ.தி.மு.க நான்கு குழுக்களாக சிதறிக்கிடக்கிறது. இராயப்பேட்டை தலைமைக் கட்டிடத்தைப் பிடித்துக்கொண்டு இருக்கிறார் எடப்பாடி பழனிச்சாமி.

இவரின் கூட்டணியில் இருக்கும் ஒரே கட்சி பா.ஜ.க. அதுவும் தமிழ்நாட்டில் 'போனி' ஆகாத கட்சி.

புறக்கடைவழியாக'பம்மிப்பம்பி'ஆட்சியைப்பிடித்துப் பழக்கப்பட்ட பா.ஜ.க.வின் பாச்சா பலிக்காததால் தீவிரத் தேர்தல் திருத்தம் (SIR) என்ற பெயரில், பீகாரில் செய்த தில்லுமுல்லுகளைத் தமிழ்நாட்டிலும் செய்து, புறக்கடை அரசியல் செய்து கொண்டு இருக்கிறது.

SIR விண்ணப்பங்கள் வழங்குவதில் குழப்பம், கேட்கும் கேள்விகளில் குழப்பம், கொடுக்க முடியாத ஆவணங்களைக் கேட்பதில் குழப்பம், ஆதார் அட்டையை ஒதுக்கித் தள்ளுவதிலும் குழப்பம். அதுவும் ஒருமாதத்தில் முடிக்க வேண்டுமாம்.

65 லட்சம் வாக்காளர்களைக் காணாமல் ஆக்கிவிட்டு பீகார் தேர்தலில் வென்றதைப் போல இங்கும் நடத்தப்பார்க்கிறது ஒன்றிய பா.ஜ.க அரசு.

இதை வரவேற்றுப் பேசியும், இதற்கு ஆதரவாக வழக்குத் தொடுப்பதும் எடப்பாடியின் நேர்மையற்ற, தமிழ் விரோத அரசியலாகவே இருக்கிறது.

வாக்குரிமை என்பது மக்களின் ஆயுதம். அதைப் பறிக்க நினைக்கும் காவி பா.ஜ.கவையும், இலை அ.தி.மு.கவையும் தேர்தலில் முறியடிக்க வேண்டும், முறியடிப்பார்கள் மக்கள்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408



தலைவர் கலைஞருடன் ஐயா இராம.சுப்பையா அவர்கள்

# காரைக்குடி அய்யா இராம.சுப்பையா அவர்கள் 118 ஆம் பிறந்தநாள் விழா!

காரைக்குடியில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை நடத்திய பெரியாரின் பெருந்தொண்டர் அய்யா இராம.சுப்பையா அவர்களின் 118 ஆம் பிறந்தநாள் விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் அய்யா இராம.சுப்பையா அவர்களின் மகள் கனகம் அம்மையார், மகன்கள் எஸ்.பி.முத்துராமன், சுப.சுவாமிநாதன், பேராசிரியர் சுப.வீரபாண்டியன், வசந்தா அம்மையார் உள்பட குடும்பத்தார் கலந்துகொண்டனர். முன்னாள் அமைச்சர் மு. தென்னவன், தி.க. பிரச்சார அணிச் செயலாளர் அ.அருள்மொழி, சிற்பி செல்வராசு, இராம.வைரமுத்து ஆகியோர் நினைவுரையாற்றினார்கள்.



அய்யாவின் சிலை திறக்கும் துணை முதல்வர்



நினைவுரையாற்றுகிறார்



பொதுச் செயலாளர்



வழக்கறிஞர் அ.அருள்மொழி



தலைவர் உரையாற்றுகிறார்

